# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: ☐☐☐☐☐☐

நேரம்: 3.00 மணி

## தாவரவியல்

மதிப்பெண்கள்: 70

### பகுதி - I

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும்: 15×1=15

1. சரியாகப் பொருந்திய இணையைக் கண்டறிக:
   அ) ஆக்டினோமைசீட்கள் - தாமதித்த வெப்பு நோய்
   ஆ) மைக்கோ பிளாஸ்மா - கழலைத் தாடை நோய்
   இ) பாக்டீரியங்கள் - நுனிக் கழலை நோய்
   ஈ) பூஞ்சைகள் - சந்தனக் கூர் நுனி நோய்
2. ஒரு ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரத்தின் ஒற்றைமடிய குரோமோசோம் எண்ணிக்கை 14 எனில் அதன் கருவூண் திசுவில் உள்ள குரோமோசோம் எண்ணிக்கை
   அ) 7 ஆ) 14 இ) 42 ஈ) 28
3. கீழ்கண்டவற்றில் பல்காய்ப்புத் தாவரம் எது?
   அ) மாஞ்சிஃபெரா ஆ) பாம்புசா இ) மியூசா ஈ) அகேவ்
4. உண்மைக் கனி என்பது
   அ) மலரின் சூலகப்பை மட்டுமே கனியாக உருவாவது
   ஆ) மலரின் சூலகப்பை மற்றும் புல்லிவட்டம் கனியாக உருவாவது
   இ) மலரின் சூலகப்பை, புல்லிவட்டம் மற்றும் பூத்தளம் கனியாக உருவாவது
   ஈ) மலரின் அனைத்து வட்டங்களும் கனியாக உருவாவது
5. பல்வேறு வகைப்பட்ட தாவர நோயெதிர்ப்பு மண்டலத்தின் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் அடங்கிய வகைப்பாடு
   அ) வேதிய வகைப்பாடு ஆ) மூலக்கூறு வகைப்பாட்டு அமைப்பு முறை
   இ) ஊநீர்சார் வகைப்பாடு ஈ) எண்ணியல் வகைப்பாடு
6. ரைபோசோம்களின் இரண்டு துணை அலகுகளும் எந்த அயனி நிலையில் நெருக்கமாகத் தொடர்ந்து சேர்ந்திருக்கும்?
   அ) மெக்னீசியம் ஆ) கால்சியம் இ) சோடியம் ஈ) ஃபெர்ரஸ்
7. செல் சுழற்சியில் G1 நிலையில் செல்பகுப்பு வரையரைப்படுத்தப்பட்டால் அந்த நிலையின் பெயர் என்ன?
   அ) S நிலை ஆ) G2 நிலை இ) M நிலை ஈ) G0 நிலை
8. வாட்சன் மற்றும் கிரிக்கின் இரட்டை சுருள் DNA மாதிரி ...................... வகையானது.
   அ) A ஆ) C இ) H ஈ) B
9. இருபக்க ஒருங்கமைந்த வாஸ்குல கற்றை காணப்படுவது
   அ) குக்கர் பிட்டேசி ஆ) லில்லியேசி இ) டிரசினா ஈ) யூக்கா
10. இருவிதையிலைத் தாவர தண்டின் ஒரே சீரான இரண்டாம் நிலை வளர்ச்சியின் போது முதல்நிலை சைலத்தின் நிலை என்ன?
    அ) மையப்பகுதியில் நிலைத்து நிற்கிறது ஆ) நசுக்கப்படும்
    இ) நசுக்கப்படலாம் அல்லது நசுக்கப்படாமல் இருக்கலாம் ஈ) முதல்நிலை ஃபுளோயத்தை சுற்றிக் காணலாம்
11. இலைத்துளைத் திறப்பு எதைச் சார்ந்தது?
    அ) பொட்டாசியம் அயனியின் உள் நுழைவு ஆ) பொட்டாசியம் அயனியின் வெளியேற்றம்
    இ) குளோரைடு அயனியின் உள்நுழைவு ஈ) ஹைட்ராக்ஸில் அயனியின் உள்நுழைவு
12. சரியானவற்றைப் பொருத்துக:

| *தனிமங்கள்* | | *பணிகள்* |
|---|---|---|
| A) மாலிப்டினம் | 1. | பச்சையம் |
| B) துத்தநாகம் | 2. | மெத்தியோனின் |
| C) மெக்னீசியம் | 3. | ஆக்சின் |
| D) சல்ஃபர் | 4. | நைட்ரோஜினேஸ் |

அ) A - 1, B - 3, C - 4, D - 2 ஆ) A - 2, B - 1, C - 3, D - 4
இ) A - 4, B - 3, C - 1, D - 2 ஈ) A - 4, B - 2, C - 1, D - 3

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13. எவ்வகை பச்சையத்தில் பைட்டால் வால்பகுதி காணப்படுவதில்லை.
அ) பச்சையம் a ஆ) பச்சையம் b இ) பச்சையம் c ஈ) பச்சையம் d
14. ஒரு மூலக்கூறு பைருவிக் அமிலம் முழுவதுமாக ஆக்சிஜனேற்றமடைந்து உருவாகும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை
அ) 12 ஆ) 13 இ) 14 ஈ) 15
15. தாவரங்களின் விதை உறக்கம்
அ) சாதகமற்ற பருவ மாற்றங்களைத் தாண்டி வருதல் ஆ) வளமான விதைகளை உருாவக்குதல்
இ) வீரியத்தைக் குறைக்கிறது ஈ) விதைச் சிதைவை தடுக்கிறது

## பகுதி - II

குறிப்பு : எவையேனும் ஆறுவினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 6×2=12
வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

16. சிறுகாம்பு (Sterigma) என்றால் என்ன?
17. ஜிம்னோஸ்பெர்ம்களின் மூன்று வகுப்புகளை எழுதுக.
18. இலையின் படம் வரைந்து பாகம் குறிக்கவும்.
19. மியூசா பாரடிஸியாகா தாவரத்தின் மலர் வரைபடம் வரைக.
20. சென்ட்ரோமியரின் அமைவிடத்தைக் கொண்டு குரோமோசோம்களின் வகைகளை எழுதுக.
21. கொடுக்கப்பட்டுள்ள படத்தினை அடையாளம் காண்க.




22. சவ்வூடு பரவல் திறன் என்றால் என்ன?
23. ஒரு முழுமையான ஒளிவினையின் போது 6 ஆக்சிஜன் மூலக்கூறுகள் வெளியேற்ற எவ்வளவு குவாண்டா ஒளி ஆற்றல் தேவைப்படுகிறது?
24. மைட்டோகாண்ட்ரியத்தின் அமைப்பை படம் வரைந்து பாகம் குறிக்கவும்.

## பகுதி - III

குறிப்பு : எவையேனும் ஆறுவினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 6×3=18
வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

25. நியூக்யூல் என்றால் என்ன?
26. ஒடு தண்டு என்றால் என்ன?
27. ஹெர்பேரியத்தின் பயன்கள் ஏதேனும் மூன்று எழுதுக.
28. மறைமுக செல்பகுப்பை நேர்முக செல்பகுப்பிலிருந்து வேறுபடுத்துக.
29. நீரின் பண்புகளை எழுதுக.
30. பாரன்கைமாவின் வகைகளை எழுதுக.
31. வசந்தகாலக்கட்டை மற்றும் குளிர்காலக் கட்டைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை எழுதுக.
32. நைட்ரஜன் வளிமண்டலத்தில் அதிகம் இருந்தாலும் தாவரங்கள் அதனைப் பயன்படுத்த முடிவதில்லை. ஏன்?
33. உட்கருவின் அமைப்பை படம் வரைந்து பாகம் குறிக்கவும்.

## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5×5=25

34. அ) கிராம் நேர், கிராம் எதிர் பாக்டீரியங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக. (அல்லது)
ஆ) ரோடோஃபைசி வகுப்பில் உள்ள பாசிகளின் நிறமிகள் மற்றும் உணவு சேமிப்பைப் பற்றி குறிப்பிடுக.
35. அ) சூல் ஒட்டு முறையின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு. (அல்லது)
ஆ) மியூசா பாரடிசியாகாவினை கலைச்சொற்களால் விவரி.
36. அ) தாவரச்செல்லின் படம் வரைந்து பாகங்களை குறிக்கவும். (அல்லது)
ஆ) DNA வின் அமைப்பை படத்துடன் விவரி.
37. அ) இருவிதையிலை தண்டிற்கும், ஒரு விதையிலை தண்டிற்கும் இடையேயுள்ள உள்ளமைப்பியல் வேறுபாடுகளை எழுதுக. (அல்லது)
ஆ) உட்சவ்வூடுபரவலை விளக்கும் உருளைக்கிழங்கு ஆஸ்மாஸ்கோப் சோதனையை படத்துடன் விவரி
38. அ) சுழல் ஒளி பாஸ்பரிகரணம் மற்றும் சுழலா ஒளி பாஸ்பரிகரணத்தின் வேறுபாடுகளை எழுதுக.(அல்லது)
ஆ) எத்திலினின் வாழ்வியல் விளைவுகளை எழுதுக.

-------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com